## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.** 86/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : |
| த/பெ | : கொள்ளாபுரி | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**21.08.2024**

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில் செய்த கையெழுத்து போலதான் எப்பொழுதும் கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி வாதி ஆறுமுகம் என் மனைவியின் தாய் மாமா என்றால் சரிதான். வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து விவசாய நிலமா, பட்டா நிலமா, பாதையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து என் மாமனாருக்கு சொந்தம் என்று நான் சொல்லியிருப்பதில் என் மாமனார் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் எதையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

2. என் மாமனாரின் இறப்பு சான்று, வாரிசு சான்று எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனாருடன் எத்தனை பேர் பிறந்தார்கள் என்றால் 2 பேர். அவர்கள் பெயர் 1. துரை, 2. சின்னதுரை ஆகும். என் மாமனாருடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 நபர்கள் என வாதி தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. என் மாமனாரின் அப்பாவுடன்

பிறந்தவர்கள் விவரம் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. மாமனாரின் அப்பா சித்திரை உடன் பிறந்தவர்கள் கொள்ளாபுரி, அரசன், பொன்னன் என்றால் எனக்கு அரசன் மட்டும் தெரியும். அரசன் மட்டும் என் மாமனாரின் சித்தப்பா என்பது தெரியும்.

3. கொள்ளாபுரி, பொன்னனை எனக்கு தெரியாது என்றாலும் நான் பார்த்ததில்லை என்றாலும் சரிதான். எனக்கு சொந்த ஊர் காவேரிராஜபுரமா என்றால் ஆமாம். என் அப்பாவிற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். என் மாமனார் துரைராஜ் மீது அரசன் அ.வ.எண்.616/1989 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அது அரசனுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் அது எனக்கு தெரியாது. என் மாமனார் இறந்த தேதி, மாதம் தெரியாது என்றால் சரிதான். அதை என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். என் மாமனார் ஆறுமுகத்திற்கு எந்த தேதி, மாதத்தில் பத்திரம் எழுதி கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. என் மாமனார் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான்தான் மேற்படி சாட்சி கையெழுத்திட்ட கொள்ளாபுரி மகன் பாபு என்பதை காட்ட என்னிடம் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் ஆதார் அட்டை உள்ளது. வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் என் மாமனாருக்கு சொத்து எப்படி வந்தது என்பதை காட்ட பட்டா, சிட்டா, அடங்கல், வரி ரசீது பற்றி வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் என் மாமனாருக்கு பூர்வீகமாக வந்த சொத்தாகும்.

5. என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொத்து துரைராஜுக்கு மட்டும் பாத்தியமானது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் துரைராஜுடன் கொள்ளாபுரியும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அவர் துரைராஜின் மகன் ஆவார். வா.சா.ஆ 1 கிரைய

ஆவணத்தில் துரைராஜ் மகன் கொள்ளாபுரி என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஆவணம் மொத்தமும் கருப்பு மையினால் எழுதப்பட்டு கொள்ளாபுரி என்பது மட்டும் நீல மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் " **கிராமத்தில் குடியிருக்கும் பயிர் ஜீவனம் சித்திரை குமாரர் துரைராஜ் சம்மத்தித்து எழுதிக்கொடுத்த** " என்று மட்டும்தான் உள்ளது என்றாலும் கொள்ளாபுரி பற்றி குறிப்பிடப்படவில்லை என்றாலும் அது எனக்கு தெரியாது.

6. என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் துரைராஜ் விற்பனை செய்ததாக மட்டும்தான் சொல்லியுள்ளேன் என்றாலும் கொள்ளபுரி சேர்ந்து விற்பனை செய்ததாக நான் சொல்லவில்லை என்றாலும் கொள்ளாபுரி சேர்ந்து எழுதவில்லை. என் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் எனது தெரு பெயர், கதவு எண் குறிப்பிடாமல் எனது ஊர் பெயரை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கொள்ளாபுரி என்பது என் அப்பாவின் கையெழுத்து என்றால் இல்லை. என் சின்ன மாமனார் சின்னதுரை என்பவரும் அதே தேதியில் வாதியின் அண்ணன் பெரியப்பனுக்கு கிரையம் கொடுத்தாரா என்றால் சரிதான்.

7. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்திற்கும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் கையெழுத்தில் உள்ள initial அவ்வப்போது மாறும். வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள பாபு என்பவரது பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான்தான் அந்த பாபு. வா.சா.ஆ 1 ஆவணத்திலும் சாட்சி கையெழுத்திட்ட பாபுவின் முகவரியில் தெரு பெயர், கதவு எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த சமயம் அவ்வாறு எழுதவில்லை.

8. வா.சா.ஆ 1 ஆவணத்திலும் சாட்சி கையெழுத்திட்ட பாபுவின் முகவரியில் தெரு பெயர், கதவு எண் சொல்லப்படவில்லை என்பதால்தான் நான் என் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் தெரு பெயர், கதவு எண்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் பாபு என்று பலர் உள்ளனர் என்றாலும் கொள்ளாபுரி சின்னதுரை, துரை என்ற பெயரில் பல நபர்கள் உள்ளனர் என்றாலும் நான் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டு கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

9. வாதி என் மனைவியின் தாய் மாமா என்பதாலும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டவர் பாபு என்பதை வைத்துக்கொண்டு பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் உள்ள விவரங்களே எனக்கு தெரியாத நிலையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

(மறு விசாரணை இல்லை)